**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**CC.NO-101/2022**
**Dated :21.05.2026**
**Deposition of witness for : P.W.1**

**List of Witness LW1 Examined as PW1 (Mahazar Witness)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கந்தசாமி | வயது | : | 36 |
| தந்தை பெயர் | : | கிருஷ்ணன் | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | வெள்ளனூர் | தொழில் | : | தலைமை காவலர் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**

**Aadhar Card of the Witness verified.**

(1, 2 எதிரிகள் ஆஜர்.)

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை**

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் வெள்ளனூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.05.2021 ஆம் தேதி, நான் ஆதனக்கோட்டை காவல் நிலையத்தில் இரண்டாம் நிலைக்காவலராக பணியில் இருந்த போது, அன்றைய தினம் காலை 09.00 மணியளவில், உதவி ஆய்வாளர் முத்துமணி, காவலர் பாலமுருகன் ஆகியோருடன் ஆதனக்கோட்டை, பெருங்களுர் மற்றும் மேட்டுப்பட்டி ஆகிய இடங்களுக்கு ரோந்து பணிக்கு சென்றோம். அப்போது உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் கூத்தாச்சிபட்டி கிராமத்தில் உள்ள சாமிதுரை என்பவரின் R.S.பதி கொல்லைக்கு சென்று பார்த்தபோது அங்கு கேஸ் சிலிண்டர் வைத்து ஒரு இரும்பு அடுப்பில் அடுக்கடுக்காக 3 அலுமினிய பாத்திரங்களை வைத்து சாராயம் காய்ச்சி கொண்டு இருந்தார்கள். அதற்கு அருகில் நின்று கொண்டு இருந்த 2 நபர்கள் எங்களை பார்த்ததும் ஓட முயற்சித்தார்கள். அதில் ஒருவரை மடக்கி பிடித்துவிட்டோம். அவரை விசாரித்தபோது அவர் கூத்தாச்சிப்பட்டியை சேர்ந்த சின்னையா மகன் இளையராஜா என பெயர் முகவரி சொன்னார். ஆஜர் 1வது எதிரி தான் மேற்படி இளையராஜா ஆவார். (சாட்சி நீதிமன்றத்தில் 1வது எதிரியை அடையாளம் காட்டினார்.) அங்கு இருந்து தப்பித்து சென்ற மற்றொரு நபர் யார் என்று கேட்ட போது

கூத்தாச்சிப்பட்டியை சேர்ந்த ஆறுமுகம் மகன் பவுன்ராஜ் என்று சொன்னார். அப்போது அங்கு சுமார் 10 லிட்டர் பிடிக்கக்கூடிய ஒரு வெள்ளைக்கேன் இருந்தது. அதில் 2 லிட்டர் சாராயம் இருந்தது. அதனை முகர்ந்து பார்த்தபோது அது கெட்டை வாடை அடித்தது. அதற்கு அருகில் 100 லிட்டர் பிடிக்கக்கூடிய பிளாஸ்டிக் பேரல் இருந்தது. அதில் சாராய ஊறல் இருந்தது. அன்றைய தினம் காலை 11.30 மணியளவில் எதிரி இளையராஜா என்பவரை உதவி ஆய்வாளர் குற்ற காரணம் கூறி கைது செய்தார். அங்கு வேறு சாட்சிகள் யாரும் இல்லாததால் காலை 12.00 மணியளவில் எனது மற்றும் காவலர் பாலமுருகன் முன்னிலையில் சுமார் 500 மி.லி பிடிக்கக்கூடிய 2 கண்ணாடி பாட்டில்களில் தலா 250மி.லி சாராயத்தை மாதிரிக்காக எடுத்து SHO சீல் வைத்தார். மேற்படி மாதிரிகள், அலுமினிய சட்டி 3, இரும்பு அடுப்பு 1, கேஸ் சிலிண்டர் 1, பிளாஸ்டிக் வாலி 1 ஆகியவற்றை எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலமாக கைப்பற்றி எங்களிடம் கையொப்பம் பெற்றார். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(** மேற்படி கைப்பற்றுதல் மகஜர் அ**.**சா**.**ஆ**.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** பின்னர் மதியம் 01.30 மணியளவில் மீதமிருந்த சாராயத்தை எங்கள் முன்னிலையில் அங்கு கொட்டி அழித்து அழித்தல் மகஜர் தயார் செய்தார். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் அழித்தல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(** மேற்படி அழித்தல் மகஜர் அ**.**சா**.**ஆ**.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் ஆஜராகி எதிரிகள் இளையராஜா, பவுன்ராஜ் ஆகியோர் மீது உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கில் புகார்தாரர் முத்துமணி எனது மேல் அதிகாரி என்றால் சரிதான். அவர் சொல்லும் உத்தரவிற்கு நான் கட்டுப்படுவேன் என்றால் சரிதான். உதவி ஆய்வாளரர் விசாரணையில் நாங்கள் காவல் நிலையத்தில் இருந்து காலை 09.00 மணிக்கு கிளம்பியதாக சொன்னேனா என்றால் சொன்னேன். நான் உதவி ஆய்வாளர் விசாரணையில் அவ்வாறு

சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் அப்போது சட்டம் ஒழுங்கு காவல் பிரிவில் இருந்தோம் என்றாலும் மதுவிலக்கு அமல் பிரிவில் இருந்து எங்களுக்கு உத்தரவு எதுவும் வரவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் சுமார் 15கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். ரோந்து பணி குறித்து நிலைய பொது நாட்குறிப்பில் பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். என்னுடைய தினசரி நாட்குறிப்பிலும் ரோந்து பணிகுறித்து பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயராக உள்ளேன் என்றால் சரிதான். நானும், காவலர் மற்றும் உதவி ஆய்வாளர் எந்த வாகனத்தில் பயணம் செய்தோம் என்றால் இருசக்கர வாகனத்தில் சென்றோம். உதவி ஆய்வாளர் தனியாக ஒரு இருசக்கர வாகனத்திலும், நானும் காவலர் பாலமுருகனும் தனியாக ஒரு இருசக்கர வாகனத்தில் சென்றோம். கூத்தாச்சிப்பட்டியிலிருந்து எவ்வளவு தூரத்தில் சாமிதுரையின் R.S. பதி கொல்லை உள்ளது என்றும் எந்த திசையில் உள்ளது என்றும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. பெருங்களூரில் இருந்து கூத்தாச்சிப்பட்டி செல்லும் ரோட்டிற்கு இடதுபுறம் உள்ளது. ரோட்டிலிருந்து மேற்படி R.S.பதி கொல்லை சுமார் 20 அடி தூரத்தில் உள்ளது என்றால் சுமார் 20 அடி தூரத்தில் ஆரம்பித்து அதற்கு பின்பாக R.S.பதி கொல்லை உள்ளது. மேற்படி சாமிதுரை என்பவர் இவ்வழக்கில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் அவர் வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றாலும் சரிதான். கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழித்தல் மகஜரில் உள்ள விவரங்கள் உதவி ஆய்வாளரால் எழுதப்பட்டது என்றாலும் அதில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணையில் சுமார் 10 லிட்டர் பிடிக்கக்கூடிய பிளாஸ்டிக் கேனில் 2 லிட்டர் சாராயம் இருந்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அழித்தல் மகஜரில் 1.5 லிட்டர் சாராயம் அழிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மீதமுள்ள 500மி.லி சாராயம் எங்கு சென்றது என்றால் 2 கண்ணாடி பாட்டில்களில் தலா 250மி.லி சாராயம் மாதிரி எடுக்கப்பட்டது. நான் சொல்வது போல மாதிரி எடுக்கப்படவில்லை என்றாலும் கைப்பற்றுதல் மகஜரும், அழித்தல் மகஜரும் முரண்பாடாக

உள்ளது என்றாலும் சரியல்ல. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் பவுன்ராஜ் இல்லை என்றாலும் அவரை நான் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. அவரை நான் பார்த்தேன். அவர் சம்பவ இடத்தில் இருந்து ஓடிவிட்டார். நான் எனது முதல் விசாரணையில் 1வது எதிரி சொல்லி தான் 2வது எதிரியின் பெயர் விவரம் தெரியும் என சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் பிளாஸ்டிக் பேரலை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். பிளாஸ்டிக் பேரல் உடைந்துவிட்டதால் கைப்பற்றவில்லை. சாராயம் பகுப்பாய்விற்கு உதவி ஆய்வாளரால் அனுப்பபடவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். அங்கு நடந்ததை பற்றி சாட்சி சொன்னேன். நாங்கள் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் அங்கு 1வது எதிரியை கைதுசெய்யவில்லை என்றாலும் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றபடவில்லை என்றாலும் உதவி ஆய்வாளர் எதிரியின் மீது பதிவு செய்த பொய்யான வழக்கிற்கு அனுசரணையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.05.21 17:20:13 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கந்தர்வகோட்டை.**